PRINCIPAL DISTRICT COURT, SALEM.

LAOP.No.165/2019 – 17.11.2022

CW1 –பழனிசாமி

2 மற்றும் 3 வது கோரிக்கைதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் சேலம் மெய்யனூர் ஸ்டேட் பேங்க் காலனியில் கதவு எண்.733 ல் வசித்து வருகிறேன். ஆர்ஜிதம் செய்த நிலத்திற்கு நஷ்ட ஈடு கோரி உள்ளேன். தோராயமாக 200 சதுரடி ஆர்ஜிதம் செய்தார்கள். ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடம் என்னுடைய சொத்தாகும். அதற்கு பழைய சர்வே எண்.32/4 ஆகும். தற்போது அதற்கு சர்வே எண்.26 ஆகும். அதற்கு பட்டா எண்ணும் 26 ஆகும். எனக்கு மேற்படி சொத்து எப்படி பாத்தியம் என்றால் அது பூர்வீக சொத்தாகும். அதற்கான எந்த பத்திரமும் என்னிடம் இல்லை. அந்த 200 அடி சேலத்திலிருந்து ஜங்சன் போகும் ரோட்டிற்கு தென்புறம் உள்ளது. இந்த 200 சதுரடி போக இன்னும் தென்புறம் இடம் உள்ளதா என்றால் சுமார் 7000 சதுரடி உள்ளது. அதை அளந்து பார்க்கவில்லை. அந்த 7000 சதுரடிக்குண்டான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். இந்த வடமேற்கில் ஜங்சன் மெயின் ரோட்டை ஒட்டி ப்ளூ மூன் என்ற கோழி கடை இருக்கிறது என்றால் அந்த ஓரத்தில் உள்ளது. அந்த இடம் எனக்கு பாத்தியப்பட்டதில்லை. அதற்கு கதவு எண் கிடையாது. அந்த

கடையை தினகர் என்பவர் நடத்தி வருகிறார் என்றால் யார் நடத்தி வருகிறார்கள் என்று தெரியாது. அந்த 7000 சதுரடிக்கு சக்குபந்தி ஜங்சன் மெயின் ரோடிற்கு தெற்கு, ரத்தினம் சொத்திற்கு வடக்கு, தேவி சிட் பண்ட்ஸ் கட்டிடத்திற்கும் மேற்கு, சாம்ப சிவ ரெட்டியார் வீட்டிற்கும் பங்களாவிற்கும் கிழக்கு என்றால் சரிதான். 2 மற்றும் 3 வது கோரிக்கைதாரர்கள் சாந்தி ம்ற்றும் இந்திராணி ஆகியோரை யார் என்றே எனக்கு தெரியாது. சாந்தி மற்றும் இந்திராணியின் தாயார் பெரியம்மாள் 22.01.1981 தேதியில் ஆர்ஜித நிலமும் அதை ஒட்டி தெ்ன்புறம் உள்ள நிலத்தை சூசன் பாபுவிடம் கிரயம் வாங்கி உள்ளார் என்றால் அந்தவிவரம் தெரியாது. சூசன் பாபு, அந்த சொத்தை வையாபுரி வகையராவிடம் விலைக்கு வாங்கினார் என்றால் அந்த விவரமும் எனக்கு தெரியாது. பெரியம்மாள் தன் மகள்களான சாந்தி மற்றும் இந்திராணி பெயரில் பகுதிபகுதியாக செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் அந்த விவரம் தெரியாது. அந்த சொத்து இன்றுவரை அவர்களின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால் என்னுடைய அனுபவத்தில்தான் இருந்து வருகிறது. பட்டாவும் அவர்கள் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில்தான் உள்ளது. மனு சொத்தில் வீடு உள்ளது. அதில் நான் குடியிருக்கிறேன். அதற்கு கதவு எண் நினைவில்லை. எனக்கு ஆதார் அட்டை மேற்படி முகவரியில் உள்ளது. பாக்கியம், தனம், குமார், சேகர், பாலு ஆகியோர்கள் என்னுடைய தம்பிகள். இவர்கள்

தனித்தனியாக வெவ்வேறு இடத்தில் குடியிருக்கிறார்கள். நான் மட்டும்தான் மனுசொத்தில் குடியிருக்கிறேன். என்னுடைய தகப்பனார் நாராயண கவுண்டர் பெயரில் பட்டா இல்லை, சிட்டா மட்டும் உள்ளது. இந்த மனு தாக்கல் செய்த உடன் என்னுடைய பெயரில் மனு செய்து என் பெயலிருந்து என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நான் பட்டா மாற்றியது தவறு என்று சாந்தியும் இந்திராணியும் மனு தாக்கல் செய்து பட்டாவை ரத்து செய்துவிட்டார்கள் என்றால் ஆம். எனக்கோ, என் தகப்பனாருக்கோ பாத்தியமில்லாத சொத்து என்றால் சரியல்ல. நான் மேற்படி சொத்தில் சுவாதினத்தில் இல்லை என்றால் சரியல்ல. ப்ளூ மூன் கோழிக்கடை இருக்கும் இடம் இந்த சொத்திற்கு சம்மந்தப்பட்டதா இல்லையா என்று அளந்து பார்த்தால்தான் தெரியும். என்னுடைய வீடு ப்ளூ மூன் கோழி கடைக்கு பின்புறம் தெற்கே உள்ளது. எனக்கோ என் தகப்பனாருக்கோ பாத்தியமில்லாத சொத்தில் நான் உரிமை கேட்கிறேன் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

இந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்போது அதற்கு முன்பாக எனக்கு நோட்டிஸ் கொடுத்தார்களா என்றால் 2019 ல் நோட்டிஸ் வந்தது. கோர்ட்டிலிருந்து எனக்கு நோட்டிஸ் வந்தது. நில ஆர்ஜித அதிகாரி முன்பாக நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலம் எனக்கு சொந்தம் என்பதற்கு அடங்கல்,

சிட்டா கொடுத்துள்ளேன். அவை என் தகப்பனார் பெயரில் உள்ளது. அந்த சொத்து நாராயண கவுண்டரின் பூர்வீக சொத்தாகும். இந்த சொத்து பூர்வீக சொத்து என்பதற்கு ஆதாரமாக செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் கலக்டர் அலுவலகத்திலிருந்து பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. இந்த நிலத்திற்கு சர்வே எண் தெரியும். டிஎஸ்.நெ.26 ஆகும். பழைய சர்வே எண்.32/4 ஆகும். சர்வே எண்.32/4 ன் முழு விஸ்தீர்ணம் எவ்வளவு என்று ஆவணம் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்.32/4 அதிக ஏரியா கொண்ட இடம் என்றும் அதில் எனக்குரிய நிலத்திற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் இழப்பீடு பெறமுடியாது என்றால் சரியல்ல. சாந்தி, இந்திராணி ஆகியோர் யார் என்றே எனக்கு தெரியாது. மனுசொத்தை அவர்கள் கிரயம் பெற்றுள்ளதாக கூறுவதால் நான் என்னுடைய உரிமையை நிரூபித்தால்தான் நான் இழப்பீடு கோர முடியும் என்றால் சரியல்ல. என்னுடய தாத்தா பெயரிலே அல்லது என் அப்பா பெயரிலோ உள்ள பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை. ஆர்ஜிதம் செய்த நிலத்திற்கு தென்புறம் உள்ள 7000 அடிக்கு அடுத்து தென்புறம் என்னுடைய சிறிய தகப்பனாருக்கு நிலம் உள்ளது. அவருக்கு எவ்வளவு சதுரடி உள்ளது என்று எனக்கு தெரியாது. அதில் என்னுடைய அப்பாவிற்கு எவ்வளவு நிலம் வந்தது என்றும் தெரியாது. என்னுடைய அப்பாவும் சித்தப்பாவும் 1975 ல் பங்கு பிரித்துக்கொண்டு ஒப்பந்தம் எழுதிக்கொண்டார்கள். அந்த பாகபிரிவினைக்கான ஆவணம் தாக்கல்

செய்யவேண்டும் என்றும் இல்லை என்றால் நான் வழக்காட தகுதியில்லை என்றால் சரியல்ல. என்னுடைய சித்தப்பா பெயர் ரத்தினம். என்னுடைய அப்பாவுடன் பிறந்தவர்கள் 3 பேர்கள். என் தகப்பனார் நாராயண கவுண்டரின் தம்பி லோகநாதன், தங்கை பெயர் நல்லம்மாள். மொத்தம் என்னுடைய தாத்தாவிற்கு முக்கால் ஏக்கர் நிலம் இருந்தது. 7000 சதுரடிக்கு பின்புறமாக தெற்கே எனக்கு சொந்தமாக வீடு உள்ளது. அது 300 சதுரடி ஆகும். என்னுடைய சித்தப்பாவிற்கு 600 சதுரடி உள்ளது. என்னுடைய அத்தைக்கு நிலம் இல்லை. மற்ற நிலங்களை விற்றுவிட்டார்கள். 300 சதுரடிக்கும் 600 சதுரடிக்கும் என்னிடம் ஆவணம் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

Sd/- R.Kalaimathi,
Principal District Judge, Salem.